1979 மார்ச் 15]

இணைப்பு I.

[133-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 403—க்கான விடையைக் காண்க.]

விடை.

(அ) மொத்த சேதத்தின் மதிப்பு ரூ. 1, 41, 02, 917; இறந்தோர் எண்ணிக்கை—8.

(ஆ) இறந்தோரின் நான்கு குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம், மொத்தம் ரூபாய் 4,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணப் பணமாக வழங்கப்பட்டது, இந்த வெள்ளத்தில், 98 கிராமங்களிலுள்ள மொத்தம் 6,508 குடிசைகள் பாதிக்கப் பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் ரூபாய் 5,32,325 கருணை மானியத் தொகை குடிசைப் புனரமைப்புக்கு வழங்கப் பட்டுள்ளது. தவிர பாதிப்புக்குள்ளானவர்களை, ஊராட்சி, நகராட்சிகளைச் சார்ந்த பள்ளிகள், மற்றும் பாதுகாப்பான நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அவர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது.

இம்மாவட்டத்தில், சுமார் 825 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்கள் சேதமடைந்தன. தவிர ஈரோடு, கோபி, பவானி வட்டங்களிலுள்ள சுமார் 806 ஏக்கர் நிலங்களில் மணல் மேடிட்டது. புளி, கரும்பு ஆகியவை பயிரிடப்பட்ட நிலங்களும் பாதிப்புக்குள்ளாயின. பாதிப்புக்குள்ளான நிலங்களில், பயிரிடும், சிறு விவசாயிகளுக்கும் குடியானவர்களுக்கும் இலவசமாக விதைகள் வழங்குவதற்கும், தாளடி பயிருக்கான உரங்களுக்கு 25 சதவீத உதவித்தொகையும், பாதிக்கப்பட்ட சம்பா பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 சதவீத உதவித்தொகை வழங்கிடவும், வேளாண்மைத் துறை கிடங்குகளிலிருந்து இலவசமாக தென்னங் கன்றுகள் வழங்கிடவும், சேதமடைந்த வாழை, கரும்பு ஆகியவைகளை மீண்டும் பயிரிட ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம் உதவிப்பணம் வழங்கிடவும், பாதிப்புக்குள்ளான பயிர்களை மீண்டும் பயிரிட ஊக்கமளிக்கும் வகையில், சிறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 500 உதவிப்பணம் வழங்கிடவும், மேலும் உருளை போன்ற காய்கறிகளை பயிரிட 25 சதவீதம் உதவியளிக்கவும், மணல் மேடிட்ட நிலங்களையும் கிணறு களையும், சீர்படுத்த உதவித்தொகை அளிக்கவும், அரசு உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறது.

சுமார் 539 கைத்தறி நெசவாளர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். 543 கைத்தறிகள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் சேதமடைந்த தங்கள் வீடுகளை மாற்றியமைப்பதற்கு உதவியாக ரூ. 1,40,500-ம் தறிகளை புதுப்பிப்பதற்காக ரூபாய் 67, 875 உதவித் தொகையும், ஆக இப்பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 2, 08, 375 வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

சேதமடைந்த பல ஏரிகளையும், குளங்களையும், நீர்ப் பாசனங்களையும் சீர்படுத்துவதற்கான பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை விரைவாக மேற் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இணைப்பு II

[138-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 404-க்கான விடையைக் காண்க.]

விவர அறிக்கை.

25—9—1977 அன்று திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு அறநிலையக் கட்டிட வாடகைதாரர் சங்க மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களும் அவற்றின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

தீர்மானங்கள் (1) :

இது சங்க அமைப்பைப் பற்றியது. அரசு மட்டத்தில், இதன் மேல் நடவடிக்கை தேவையில்லை.

(2) சமீப காலத்தில் இந்து அறநிலையத் துறையினரால் நியாய வாடகை என்ற பெயரால் ஒருதலைப்பட்சமாகவும் அநியாயமாகவும் செலுத்தமுடியாத அளவு உள்ளதாகவும் உயர்த்தப்பட்ட வீடு, கடை வாடகைகள் சம்பந்தமாக பாதிக்கப் பட்ட சங்க உறுப்பினர்கள் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பரிந்து ஆவன செய்யும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(3) நடைமுறையில் உள்ள வாடகை நிவாரணச் சட்டத்தை அறநிலையக் கட்டிடங்களுக்கு ரத்து செய்ததை மாற்றி மறு படியும் அனைத்து வாடகைதாரர்கள் போல் எங்களையும் கருதும் வண்ணம் சட்ட மன்ற உறுப்பினர்களையும், சகல அமைச்சர் களையும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(4) இந்து அறநிலைய ஆட்சித்துறையினர் கூட்டப்பட்டுள்ள அதிக வாடகையை, இந்த கோரிக்கைகள் சட்ட சபையில் பரிசீலனை செய்து முடிவு செய்யும் வரை ஆணையர் அவர்கள் சகல நிர்வாக அதிகாரிகளுக்கும், பழைய வாடகையையே வாங்கும்படி உத்திரவு பிறப்பிக்கும்படி இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.